








# ஆசார்யர்களின் க்ரந்த முத்துக்கள்

தொகுத்தளிப்பவர் : கீ ப ரா வி

மலர் 2 இதழ் 9 12.03.2026




**Padma Priye Padmini Padma Haste**
**Padmalaye Padma Dalayadakshi**
**Viswa Priye Vishnu Manonukule**
**Tvatpada Padmam Mayi Sannidastva**



ஸ்ரீமதே வேதாந்த ராமானுஜ மஹாதேசிகாய நம:

ஸ்ரீமதே ரங்கராமாநுஜ மஹாதேசிகாய நம:

ஸ்ரீமதே வராஹ மஹாதேசிகாய நம:

# முத்துக்கள்

உபாயத்திற்கு வேண்டிய பன்னிரண்டு குணங்கள் பிரபத்தி பண்ணும்போது நினைக்க வேண்டியவைகளில் முக்கியங்கள் :

(1) வாத்ஸல்யம்:- தன்னை அடைந்தவர்களின் குற்றங்களைப் பாராமல் அவர்களை ஏற்றுக்கொள்ளும்படி செய்யும் இரக்கம். இதினாலே பிரபத்தி செய்கிறவன் தன் குற்றங்களை நினைத்துக்கொண்டு ஓடிப்போகாமல் இருப்பது ஏற்படும்.

(2) ஸ்வாமித்வம்-தன்னை ஸொத்தாக உடையவனாயிருப்பது, இதனாலே தன்னுடைய லாபமாக எம்பெருமான் ரக்ஷிப்பன் என்று ஏற்படும்.

(3) ஸௌ சீல்யம் - எம்பெருமான் மிகவும் உயர்ந்தவனாயிருந்தபோதிலும் மிகவும் தாழ்ந்தவர்களோடு இடைவிடாமல் சேர்ந்திருக்கும் ஸ்வபாவம். இதனால் அவனுடைய பெருமையைப் பார்த்து ஓடிட் போகாமல், வண்டி ஓட்டுவது முதலானதைத் தான் வேண்டினால் அவன் செய்வன் என்று நம்பிக்கை ஏற்படும்.

(4) ஸௌலப்யம்-மிகவும் உயர்ந்தவர்களும்கூட கிட்டமுடியாத எம்பெருமான் எல்லாரும்பார்க்கும்படியாய் வருகை. இதனாலே நாம் அவனை எங்கே பார்க்கப்போகிறோம் என்று ஆசையை விட்டு இருப்பது நீங்கும்.

(5) ஸர்வஜ்ஞத்வம் - எல்லாம் அறிந்தவனாயிருக்கை. இதினாலே தன்னை அடைந்தவர்களுக்குக் கொடுக்கவேண்டிய நன் மைகளிலும் போக்கவேண்டிய விரோதிகளிலும் அவனுக்குத் தெரியாதது ஒன்றுமில்லை.

(6) ஸர்வசக்தித்வம் - எதையும் செய்யும் திறமை. இதினாலே ஸம்ஸாரிகளான நம்மைத்தான் நினைத்தபோது நித்யஸூரிகளுடன் சேர்ப்பன் என்ற நம்பிக்கை ஏற்படும்.

(7) ஸத்யஸங்கல்பத்வம் - அவன் நினைத்ததை அவ வனாலும் விலக்கமுடியாதிருக்கும் ஸ்வபாவம், இதனாலே 'எல்லா பாபங்களிலிருந்து உன்னை விடுவிப்பேன்' என்று எம்பெருமான் சொன்ன வார்த்தையானது பொய் ஆகாது என்கிற நம்பிக்கை உண்டாகும்.

(8) பரமகாருணிகத்வம் - மிகுந்த கருணை உள்ள வனாயிருக்கை. இதனால் மிகவும் குற்றமுள்ளவர்களைக் கூட ஒரு வியாஜத்தாலே எம்பெருமான் ரக்ஷிப்பன் என்கிற நம்பிக்கை ஏற் படும்.

(9) கிருதஜ்ஞத்வம் - செய்ததை மறந்து போகாதிருப் பது. இதனாலே நம்மை எம்பெருமான் ஒருபோதும் கைவிட மாட்டான் என்கிற நம்பிக்கை ஏற்படும்.

(10) ஸ்திரத்வம் -தன்னை அடைந்தவர்களை ரக்ஷிப்பதில் நிலையாய் இருப்பது. இத னாலே அவனை எவர்கள் விலக்கினாலும் நம்மை விடமாட்டான் என்கிற நம்பிக்கை ஏற்படும்.

(11) பரிபூர்ணத்வம் - எல்லாம் நிறைந்திருப்பது.இதனாலே நாம் எம்பெருமானுக்கு ஸமர்ப்பிப் பதில் உயர்வு தாழ்ச்சி பார்க்கமாட்டான். நம்முடைய எண் ணத்தையே பார்ப்பன் என்கிற நம்பிக்கை ஏற்படும்.

(12) பர மோதாரத்வம் - நாம் செய்யும் பிரபத்தியின் சிறுமையையும், தான் கொடுக்கும் பலனின் பெருமையையும், அதைப் பெறுகிற நம்முடைய தாழ்மையையும்

**பார்க்கமாட்டான். கேட்டதைக் கொடுப்பன்; தன்னையும் கொடுப்பன். இவ்வளவு செய்தபோதி லும் தான் செய்தது போதாது என்று எண்ணும் ஸ்வபாவம் இதனாலே தன்னையும், தன்னைச் சேர்ந்தவர்களையும் ரக்ஷிக்க வேண்டுமென்று எம்பெருமானைக் கேட்கலாம் என்ற எண்ணம் ஏற்படும்.**

*****************************************************************

# ஸ்ரீ என்ற சொல்லின் ஆறு பொருள்கள்

ஒரு பொருளை விரும்புகிறவன், அதனைப் பெறச் செய்யுமாறு உதவுவது புருஷகாரமாகும் (சிபார்சு). நாம் பெற விரும்பும் மோக்ஷத்தை அளிக்குமாறு எம்பெருமானிடம் சிபார்சு (பரிந்துரை) செய்பவள் பிராட்டி. எனவே புருஷகாரம் (சிபார்சு) பரம்பரையாய் மோக்ஷகாரணம். தன்னைச் சரணமடைந்தவனைக் காப்பாற்ற முற்பட்ட எம்பெருமான், அவனது குற்றத்தைக் கருதி சிறிது தயங்க அச்சமயம் பிராட்டி பெருமானிடம் தவறு செய்யாதவன் யார் ?என்று கூறி தக்க தந்த்ரத்தாலே அவன் குற்றத்தை மறைத்து அவனை ஏற்றுக் கொள்ளச் செய்யுமாறு புருஷாகாரம் செய்கிறாள். இஃது ச்ரீயதே ச்ரயதே என்று விரித்துரைப்பதின் பொருள்.

**புருஷகாரமாக இருப்பவர்களை அடைதல் :-**

1. அர்த்த ஸ்வபாவம், 2. அநுஷ்டானம், 3. லோக த்ருஷ்டி, 4. குருஉக்தி, 5. ச்ருதி, 6. ஸ்ம்ருதி ஆகியவைகளால் புருஷகாரம் செய்பவர்களைப்பெறவியலும்.

1. **அர்ச்ச ஸ்வபாவம்** :- ஜகன்மாதாவானதால் வாத்ஸல்யம் அதிகமாகவிருக்கும். அதனால், தவறுகள் அனைத்தையும் பொறுத்துக் கொள்ளுதல் இயல்பாக ஏற்படும். எனவே இவளை புருஷகாரமாக அடையலாம்.

2. **அநுஷ்டானம்** :- ஹிரண்யகசிபுவைக் கொன்ற நரஸிஹ்மனை அணுக அஞ்சிய தேவர்கள் பிராட்டியைச் சரணடைந்து அவனை முன்னிட்டுக் கொண்டு எம்பெருமானை அணுகினர்.

3. **லோக த்ருஷ்டி** :- அந்தப்புரத்திலுள்ள பரிஜனங்களின் அதிகமான அபராதங்களையும், மன்னர்கள் அவர்களின் எளிய பணிவிடைகளால் மகிழ்ந்து பொறுத்துக் கொள்வர்.

4. **குரூக்தி** :-- நம்மாழ்வார் முதலியவர்களுடைய "அகலகில்லேன்" என்பது போன்ற பாசுரங்கள்.

5**. ச்ருதி** :- ஆழ்வார் போன்றோர்களின் திருவாய்மொழிக்கு ஆதாரமான ச்ருதிகள்.

6. **ஸ்ம்ருதி**:- "வாச : பரம் ப்ரார்த்தயிதா ப்ரபத்யேத் நியத: சீரியம்,""எம்பெருமானை அடைய வேண்டுமென்று விரும்புகின்றவன் நியமத்துடன் நிச்சயமாய் பிராட்டியிடம் சரணாகதி செய்ய வேண்டுமென்று சௌனக ஸம்ஹிதை கூறுகிறது.

இவ்வாறாக பிராட்டிக்கு எம்பெருமான் திருவடிகளில் கடகத்வம் (சேர்ப்பிக்கும் தன்மை) பல ப்ரமாணங்களால் ஸித்தமாகையால் அவள் புருஷகார பூதையாய் ஸித்தோபாய விசேஷமாய் அடையப்படுகிறாள்.

3. **ச்ருணோதி, 4. ச்ராவயதி** :- என்னையே உபாயமாகப் பற்றுகிறவனை நான் ஸம்ஸாரத்திலிருந்து கரையேற்றுகிறேன் என்றும், இரக்கங்கொள்ளுதல் சீரிய தர்மமென்றும் எம்பெருமான் திருப்பவள வாயிலிருந்து கேட்டறிகிறாள் பெரியபிராட்டி. இஃது ச்ருணோதி என்பதால் உணரலாகின்றது. பின்னர் தன்னிடம் புருஷகாரம் பண்ண வேண்டுமென்று சரணடைந்தவர்களை ஏற்றருள எம்பெருமானிடம் "சரணமடைந்தவரை உயிர் கொடுத்தாவது காப்பாற்ற வேண்டும்" என்று பெண் புறா ஆண் புறாவிடம் கூறியது போன்று, பெரியபிராட்டி எம்பெருமானிடம் பரிந்துரை செய்கிறாள். இஃது ச்ராவயதி என்பதன் பொருளாகும்.

5. **ச்ருணாதி** :- எம்பெருமான் கருணையே வடிவாகக்கொண்ட பிராட்டியுடனிருந்தே ரக்ஷிக்கிறான் எனப் பாஞ்சராத்ர கோட்பாடுகளிலும் வேதாந்தத்திலும் கூறுகிறவாறு உபாயமாகிறாள். திருவாய்மொழியில் "மணம் அகலாத தாமரை மலரிலிருக்கும் பிராட்டி ஜீவாத்மாக்களின் கருமங்களைப் போக்குகிறாள்" என்று உள்ளவாறு அவள் தன்னை சரணடைந்தவர்களின் கர்மங்களையும், அவர்களின் பாபங்களையும் போக்கடித்து எம்பெருமானின் க்ருபாகடாக்ஷத்திற்குப் பாத்திரர்களாக்கி அவனை ஏற்குமாறு பரிந்துரை செய்கிறாள்.

6. **ச்ரீணாதி** :- பிராட்டி, தனது கருணை முதலிய திருக்கல்யாண குணங்களாலே தன்னை அடைந்தவர்களை எம்பெருமான் ஏற்க பரிந்துரையைத் தக்க ஸமயத்தில் வழங்கி ஏற்கச் செய்வதோடு நில்லாது எம்பெருமானின் நிரதிசய கைங்கர்யம் வரை பெறச் செய்வாள்.

## ரஹஸ்யத்ரயங்களின் பொருட்கள்

**திருமந்த்ரம்** :- இதில் ஜீவாத்மா, பரமாத்மா இவர்களின் ஸ்வரூபங்களும், ஜீவாத்மா ஈச்வரன், அசேதனம் ஆகிய இரு தத்துவங்களிலும் வேறுபட்ட மூன்றாவது தத்துவம். இவன் பெருமாள் பிராட்டி ஆகிய இருவர்க்கு மாத்திரம் சேஷன். இவனுக்கு சேஷமான தொன்றுமில்லை. இவன் ஸ்வதந்த்ரனல்லன். எம்பெருமான் நியமனப்படி நடப்பவன். இவையனைத்தினையும் உணர்த்தி, மோக்ஷத்திலே பேரவாவையும், அதையடைய விரைவையூட்டி, அதைப் பெற ஓர் உபாயத்தை அனுஷ்டிக்கத் தகுதியைத் தோற்றுவிக்கும்.

**த்வயம்**: பெரிய பிராட்டியுடன் கூடிய எம்பெருமானுக்கு எல்லாக் காலதேச நிலைகளிலும் கைங்கர்யம் செய்ய விரோதியான கர்மங்களெல்லாம் கழியக் பெற்று பூரண கைங்கர்யம் செய்யும் பேறுபெற வேறு உபாயங்களை அனுஷ்டிக்க சக்தியற்றவனாய் எளியனான யான், என்னைக் காக்கும் பொறுப்பிலும் பயனிலும் பற்றற்றவனாய் ஸ்ரீமந் நாராயணனிடம் ஐந்து அங்கங்களுடன் கூடிய ப்ரபத்தியை செய்கின்றேன்.

**ச்ரமச்லோகம்**: - உபாயத்தைச் செய்யுமாறு விதிக்கின்றது. எளியவனான நீ தாமதமாய்ப் பயன் பயப்பதும் உன்னால் செய்ய இயலாதவையுமான உபாயங்களைச் செய்ய இயலவில்லையே என வருந்தற்க! ஸர்வ ரக்ஷகனான என்னையே உபாயமாகப் பற்றி ஐந்து அங்கங்களுடன் கூடிய சரணாகதியைச் செய். நீ கடமையைச் செய்து முடித்தவனாவாய். அனாதி காலமாய் உன்னைத் தொடர்ந்து வந்த பாபங்களனைத்தையும் பஞ்சுப் பொதியில் இட்ட நெருப்புப் பொறி போன்று சரணாகதி அழித்துவிடும். உனக்கு எனது பதத்தையும் கைங்கர்யத்தையும் அளிப்பேன். நீ கவலையற்றிரு.

*********************